Kurusady
CATECHISM

# புனித அந்தோணியார் ஆலயம், குருசடி

**மறைக்கல்வி - வினாடிவினா 006 - நவம்பர் 14, 2021 முதல் நவம்பர் 20, 2021 வரை.**

## ஆறாவது வாரத்திற்கான வினாடிவினா

**சரியான பதிலை டிக் [ ✔ ] செய்யவும்** **மதிப்பெண்கள்: 100**

**கேள்வி 01**

திருப்பட்டம் பெறுவோரில் யாருக்கெல்லாம் கையில் நற்செய்தி நூல் கொடுப்பார்கள்? (திருவழிபாடு அருட்பணி ஞா. ரோலிங்டன் பக்கம் 99)

[ ] ஆயர், அருள்பணியாளர்
[ ] திருத்தொண்டர், அருள்பணியாளர்
[ ] ஆயர், திருத்தொண்டர்
[ ] திருத்தொண்டர், அருள்பணியாளர், ஆயர்

**கேள்வி 02**

குருத்துவத்தின் நிறைவு _______________ https://ta.wikipedia.org/wiki (குருத்துவம்)

[ ] ஆயர் நிலை
[ ] திருத்தொண்டர் நிலை
[ ] திருப்பணியாளர் நிலை
[ ] பொதுநிலையினர் நிலை

**கேள்வி 03**

கிறிஸ்துவின் பணிக் குருத்துவத்தில் பங்கு பெறுபவர்கள் யார்? https://ta.wikipedia.org/wiki (குருத்துவம்)

[ ] பொதுநிலையினர்
[ ] குருக்கள்
[ ] வேதியர்
[ ] பொதுநிலையினர் மற்றும் வேதியர்

**கேள்வி 04**

திருமணத்தின் இன்றியமையாத பண்புகள் ______________ (தி. ச.1056)

[ ] ஒருமைத்தன்மையும் முறிவுபடாத்தன்மையும்
[ ] உடன்படிக்கையும் நிலைப்புத் தன்மையும்
[ ] அன்பும் பாசமும்
[ ] இருவரும் ஒரே உடல்

**கேள்வி 05**

திருமண ஒப்பந்தம் யார் செய்யலாம்? (தி. ச.1058)

[ ] திருமணம் வேண்டுவோர்

[ ] சட்டத்தால் தடை செய்யப்பட்டிராத அனைவரும்

[ ] திருமண வயது வந்தோர்

[ ] வயது வந்த ஆணும் பெண்ணும்

**கேள்வி 06**

திருமணம் செய்வதற்கான வாக்குறுதி, அது ஒரு தரப்பாயினும் அல்லது இரு தரப்பாயினும் _______________ என்றழைக்கப்படுகிறது. (தி. ச.1062-1)

[ ] திருமணம்

[ ] ஒப்பந்தம்

[ ] நிச்சயதார்த்தம்

[ ] உடன்படிக்கை

**கேள்வி 07**

மணமக்கள் தங்கள் திருமணத்தை தாங்களே நிறைவேற்றிக் கொள்கிறார்கள். இதற்கு அருள்பணியாளர் _____________ இருக்கிறார்.(திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 233)

[ ] அதிகாரம் கொடுப்பவராக

[ ] இயேசுவின் பிரதிநிதியாக

[ ] ஒரு சாட்சியாக

[ ] ஆசி அளிப்பவராக

**கேள்வி 08**

திருமணத்தின் முதல் நோக்கம் _______________ (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 233)

[ ] அன்பு

[ ] உடன்படிக்கை

[ ] இரக்கம்

[ ] இருவரும் ஒரே உடல்

**கேள்வி 09**

திருமண வாக்குறுதியின் வழியாக தம்பதியரில் ஒருவர் ஒருவரை ஒருவர் _______________ வரை கட்டுப்படுத்துகிறது.

http://www.tamilcatholicdaily.com/Prayers/wedding.html உடன்படிக்கை

[ ] ஒன்றிக்கும்

[ ] ஒத்துழைக்கும்

[ ] அன்பு செய்யும்

[ ] இறக்கும்

**கேள்வி 10**

குடும்பத்தின் உயிருள்ள உறுப்பினர் என்ற முறையில் குழந்தைகள் தங்கள் பெற்றோர் _______________அடைய தங்களுக்குரிய வகையில் உதவுகிறார்கள். (2 வத். சங்க ஏடு: இன்றைய உலகில் திருச்சபை: 48)

[ ] மகிழ்ச்சி அடைய

[ ] புனிதம் அடைய

[ ] உயர்வு அடைய

[ ] முதிர்ச்சி அடைய

**கேள்வி 11**

திருமணத்திற்கு ஆன்மீக தயாரிப்பாக மணமக்கள் என்ன செய்ய வேண்டும்?

http://www.tamilcatholicdaily.com/Prayers/wedding.html தயாரிப்பு

[ ] நற்கருணை பெற வேண்டும்

[ ] செபிக்க வேண்டும்

[ ] குருவிடம் ஒப்புரவு செய்ய வேண்டும்

[ ] பெற்றோரிடம் ஆசி பெற வேண்டும்

**கேள்வி 12**

"திருமணம் கடவுளால் நிச்சயிக்கப்படுகிறது" என்று சொன்ன நற்செய்தியாளர் யார்?

https://ta.wikipedia.org/wiki திருமணத்தின் புனிதம்

[ ] மத்தேயு

[ ] மாற்கு

[ ] லூக்கா

[ ] யோவான்

**கேள்வி 13**

"நல்ல மனைவியே ஒருவனுக்குக் கிடைக்கும் நல்ல சொத்து. ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர் பெறும் செல்வங்களுள் ஒன்றாக அவளும் அருளப்படுவாள்". இது பழைய ஏற்பாட்டில் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது?

https://ta.wikipedia.org/wiki திருமணத்தின் புனிதம்

[ ] தொடக்கநூல்

[ ] இணைச்சட்டம்

[ ] லேவியர்

[ ] சீராக்கின் ஞானநூல்

**கேள்வி 14**

தங்கள் ____________ வாயிலாகக் கிறிஸ்துவின் அனைத்து விசுவாசிகளைப் போலவே பொதுநிலையினரும் தங்கள் திருத்தூதுப்பணிக்கு இறைவனால் நியமிக்கப்பட்டுள்ளனர். (தி.ச.225-1)

[ ] திருமுழுக்கு மற்றும் உறுதிப்பூசுதல்

[ ] திருமுழுக்கு மற்றும் குருத்துவம்

[ ] உறுதிப்பூசுதல் மற்றும் குருத்துவம்

[ ] குருத்துவம்

**கேள்வி 15**

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு உயிர்கொடுத்திருப்பதால், அவர்களுக்குக் ____________ அளிக்க கடமையும் உரிமையும் கொண்டுள்ளனர். (தி. ச.226-2)

[ ] உணவு

[ ] கல்வி

[ ] மருத்துவம்

[ ] உறைவிடம்

**கேள்வி 16**

கத்தோலிக்க கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை எது? www.iraivaalvu.de/thiruvarudsathanam.html

[ ] திருப்பலி

[ ] திருமுழுக்கு

[ ] திவ்ய நற்கருணை

[ ] ஒப்புரவு

**கேள்வி 17**

மற்ற அருட்சாதனங்களில் கடவுளின் கொடைகளை நாம் பெறுகிறோம். நற்கருணையில் யார் தம்மையே நமக்குத் தருகிறார்.? www.iraivaalvu.de/thiruvarudsathanam.html

[ ] கடவுள்

[ ] தூயஆவி

[ ] இரண்டும் சரி

[ ] இரண்டும் தவறு

**கேள்வி 18**

நற்கருணை திருவருட்சாதனத்தின் மாற்று பெயர்கள் யாவை?
www.iraivaalvu.de/thiruvarudsathanam.html

[ ] திருப்பலி, பலிப்பூசை

[ ] திருப்பலி கொண்டாட்டம்

[ ] திருப்பலி வழிபாடு

[ ] மூன்றும் சரி

**கேள்வி 19**

திருமுழுக்கு நம்மை உயிருள்ள ஆலயத்தின் உயிருள்ள கற்களாக ஆக்குகிறது சரியா தவறா?.

www.iraivaalvu.de/thiruvarudsathanam.html

[ ] சரி

[ ] தவறு

**கேள்வி 20**

நற்கருணை வழிபாட்டில் கிறிஸ்துவே ஆலயமாகவும், அவரே குருவாகவும், அவரே பலிப்பீடமாகவும், அவரே செம்மறியாகவும் உள்ளார். நாம் அவரோடு இணைந்து அவரில் ஆலயமாகவும், குருவாகவும், பலிப்பீடமாகவும், செம்மறியாகவும் ஆகிறோம். சரியா தவறா?

www.iraivaalvu.de/thiruvarudsathanam.html

[ ] சரி

[ ] தவறு

**கேள்வி 21**

திருப்பலி என்பது ____________________ www.iraivaalvu.de/thiruvarudsathanam.html

[ ] பலி

[ ] அன்பின் பலி

[ ] உன்னதபலி

[ ] அன்பின் உன்னதபலி

**கேள்வி 22**

முதல் நற்கருணை இறைவன் தந்த முதல் முத்தம் என்று கூறிய புனிதை யார்?

[ ] புனித அல்போன்ஸா

[ ] புனித குழந்தை தெரஸா

[ ] புனித அவிலா தெரஸா

[ ] புனித மரிய கொரற்றி

**கேள்வி 23**

ஒன்றிப்பின் உணவு எது? https://ta.wikipedia.org/wiki/நற்கருணை

[ ] திருமணவிருந்து

[ ] நற்கருணை

[ ] விருந்து

[ ] பலி

**கேள்வி 24**

நற்கருணையின் அற்புதங்கள் எத்தனை அவை யாவை?

https://ta.wikipedia.org/wiki/நற்கருணை_அற்புதங்கள்

[ ] அப்பமும் இரசமும், உண்மையான சதையாகவும், இரத்தமாகவும் மாறுதல்.

[ ] நற்கருணை அப்பம் பல ஆண்டுகள் அழியாமல் இருத்தல்.

[ ] நற்கருணையின் பிரசன்னத்தால் அதிசயங்கள் நிகழ்தல்.

[ ] மேற்கூறிய மூன்றும்

**கேள்வி 25**

கிபி 750-ஆம் ஆண்டு இத்தாலியின் லான்சியானோ என்ற இடத்தில், புனித பிரான்சிஸ் ஆலயத்தில் அப்பமும் இரசமும் எவ்வாறு மாற்றம் பெற்றது?

https://ta.wikipedia.org/wiki/நற்கருணை_அற்புதங்கள்

[ ] உடலும் இரத்தமுமாக

[ ] உடலாக மட்டும்

[ ] இரத்தமாக மட்டும்

---

இந்த கேள்வித்தாள் உங்கள் பயிற்சிக்கு வெளியிடப்பட்டுள்ளது.

உங்கள் பதிலை ஆன்லைனில் சமர்ப்பிக்க, இந்த இணையதள முகவரியில் பதிவு செய்யவும்
https://www.kurusady.com/catechism/

ஆன்லைனில் சமர்ப்பிக்க முடியாதவர்கள், இந்த வினாத்தாளை அச்சிட்டு உங்கள் பதிலை டிக் [✔] செய்து பங்கு அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம்.

இப்படிக்கு,
அருட்பணி. பெர்பெச்சுவல் ஆன்றனி,
பங்கு தந்தை,
புனித அந்தோணியார் ஆலயம், குருசடி.

---